மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே


செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

20.08.2022 சனிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

## முன்னாள் ஜனாதிபதியின் வீட்டுக்கு பாதுகாப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான பெங்கிரிவத்தை வீட்டிற்கும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் மற்றும் புலனாய்வு அதிகாரிகளுக்கு இந்த பணிப்புரையை விடுத்துள்ளனர். குறித்த பிரதேசத்தில் நேற்று (19) இடம்பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் போதே இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது

## ஆயுதம் தாங்கிய படையினருக்கு ஜனாதிபதி அழைப்பு



இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும், பொதுமக்களின் அமைதியைப் பேணுவதற்காக ஆயுதம் தாங்கிய முப்படையினருக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இவ்விடயம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## மருந்து தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு

### ஜனாதிபதி உறுதி

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் வைத்தியசாலைகளில் தற்போது மருந்துகளுக்கு பாரியளவில் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்நிலையில் மருந்து தட்டுப்பாடு மிக விரைவில் தீர்க்கப்படும் என்றும் அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நடிகர் ஜாக்சன் அன்டணியின் நலம் விசாரிக்க கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விஜயம் செய்து இருந்தார். இதன்போது தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் டபிள்யூ.கே. விக்ரமசிங்கவை சந்தித்து வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்த போது இதனை அவர் குறிப்பிட்டார்.இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,தற்போது நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளில் பாரியளவில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு 02

## கடனாளிகளிடமிருந்து போதிய உத்தரவாதத்தை எதிர்பார்க்கும் சர்வதேச நாணய நிதியம்

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்றின் இலங்கைக்கான விஜயத்தின் போது கடனாளிகளிடமிருந்து போதிய உத்தரவாதத்தை எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இலங்கை முகங்கொடுக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க உதவிப் பொதியை அறிமுகப்படுத்துவதற்கான பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. நிதியத்தின் பணியாளர்கள் ஒகஸ்ட் மாதம் 24 முதல் 31 வரை இலங்கைக்கு விஜயம் செய்வார்கள் என ரொய்டர்ஸ் செய்தித் சேவை தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் வசதிகளை வழங்குவதற்கு, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கடன் வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் அவசியமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்த வாரம் இலங்கை வரும் ஐ.எம்.எப் அதிகாரிகள் குழு

பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்தங்கள், கொள்கைகள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடுவதற்காக சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குழு அடுத்த வாரம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளது. இந்தக் குழுவின் விஜயம் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அமைய உள்ளதாக இலங்கை தொடர்பில் நேற்று வெளியிட்ட அறிக்கையில், சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர் பீற்றர் புருயர் மற்றும் இலங்கை குழுவின் தலைவர் மசாஹிரோ நொசாகி ஆகியோர் தலைமையில் இந்தக் குழு வழிநடத்தப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டுக்கான, பணிக்குழாம் மட்ட ஒப்பந்தத்தை நோக்கி முன்னேறுவதே இந்த விஜயத்தின் நோக்கமாகும். இலங்கையின் பொதுக் கடன் நிலைத்தன்மையற்றது என மதிப்பிடப்படுவதால், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின், விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் ஒப்புதலுக்கு, கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்காக, இலங்கையின் கடன் வழங்குநர்களின் போதுமன உத்தரவாதங்கள் 02

## மின்சாரப் பாவனை குறைவு

நாட்டில் மின்சார பாவனை 20 வீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது. மின்சார பாவனை அதிகமாக உள்ள காலப்பகுதியில் மின்சாரப் பாவனை குறைந்துள்ளதாக அதன் தலைவர் ஜனக ரத்னாயக தெரிவித்தார். எவ்வாறாயினும், தற்போதைய மின்சார பாவனை 20 வீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளது

நாட்டில் மின்சார பாவனை 20 வீதத்திற்கும் மேலாக குறைந்துள்ளது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது. மின் பாவனையை குறைப்பதற்கு தெளிவான வேலைத்திட்டம் ஒன்று தேவை என இலங்கை மின்சார சபையின் பொறியியல் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சத் இந்துவர தெரிவித்துள்ளார். மன்னார் மற்றும் புனரின் ஆகிய பிரதேசங்களில் இரண்டு காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களை நிறுவ அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் முதலீடு செய்யப்படவுள்ளது.

### அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டங்களுக்கு

## மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டங்களுக்கு அரச, தனியார் பிரிவுகள் உள்ளடங்கலாக மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். எரிசக்தி துறையில் காணப்பட்ட அடிப்படை பிரச்சனைகளை தீர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட விரைவான நடவடிக்கையினால், மக்களுக்கு ஓரளவு நிவாரணம் கிடைத்துள்ளது என்றும் அவர் கூறினார். மாகாண ஆளுநர்களுடன் பிரதமர் அலுவலகத்தில் நேற்று (19) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் தினேஷ் குணவர்த்தன இந்த விடயங்களை தெரிவித்தார்.

### இரண்டு வயதுக்கு குறைந்த குழந்தைகள் உள்ள

## தாய்மார்களுக்கு வெளிநாடு செல்ல அனுமதி இல்லை

இரண்டு வயதுக்கு குறைந்த குழந்தைகள் உள்ள தாய்மார்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட மாட்டாது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. அவ்வாறான பெண்கள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவை பெற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்காது என்றும் அந்த பணியகம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவிக்கிறது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுகளை பெற்றுக்கொள்ளும் போது 02



சுவிஸ்நாட்டில் சூரிச் நகரில் அமைந்துள்ள ஹரேகிருஸ்ணா ஆலயத்தில் நேற்று இரவு இடம்பெற்ற கிருஸ்ணஜெயந்தியின்போது பிடிக்கப்பட்ட படம்

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும்

### இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் 25ஆம் திகதிக்கு முன்னர் நடத்த வேண்டும் என இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு பின்னர் தேர்தல் திகதியை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் என அதன் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். ஏற்கனவே உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவிக்காலத்தை ஒரு வருடத்திற்கு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் நீட்டித்துள்ளார், எனினும் அந்த காலம் மார்ச் 25 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதன்படி, தற்போதுள்ள விதிகளின் அடிப்படையில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களைத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவு செய்து, அதன் பின்னரே தேர்தலை நடத்த வேண்டும். அதன்படி உள்ளூராட்சி மன்றங்களுக்கு 341 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக ஆணையாளர் நாயகம் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

## மருந்து தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு

நிலவுகிறது. அத்தியாவசிய மருந்துகள் மற்றும் அவசர சத்திர சிகிச்சை உபகரணங்கள் பற்றாக்குறை நிலவுகிறது. இந்நிலையில் வைத்தியசாலைகளுக்கு மருந்துகளை விரைவாக பெற்றுக்கொடுப்பதே எனது முக்கிய இலக்குகளில் ஒன்றாக இருக்கிறது. அதற்காக ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக மருந்து தட்டுப்பாடு மிக விரைவில் தீர்க்கப்பட்டு மக்களுக்கு இலவச சுகாதார சேவையை அனுபவிக்க வாய்ப்பு பெற்று கொடுக்கப்படும் என்றார்.

## அடுத்த வாரம் இலங்கை வரும்

அவசியமாகும். இந்த விஜயத்தின்போது, பங்குதாரர்களுடனும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள், ஏனைய நடத்த உள்ளதாக அதன் அறிக்கையில் பேச்சுவார்த்தைகளை குறிப்பிடப்பட்டுள்ளது.

## இரண்டு வயதுக்கு குறைந்த குழந்தைகள் உள்ள

தாய்மார்கள், தங்களுக்கு பிள்ளைகள் இருக்கின்றனர் அல்லது இல்லை என்பதையும் அல்லது இரண்டு வயதுக்கு மேற்பட்ட, 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகள் உள்ள தாய்மார்கள், அந்த பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் கல்வி தொடர்பில் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் சத்தியக்கடதாசி வழங்க வேண்டும். அந்த சத்தியக்கடதாசியானது, தமது பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட வேண்டும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# அனல் மின் நிலையத்திற்கு இரண்டு வருடங்களுக்கு நிலக்கரி வழங்குகின்றது

நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கு இரண்டு வருடங்களுக்கு நிலக்கரி வழங்க ரஷ்ய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது. லங்கா நிலக்கரி நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஜகத் பெரேரா இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

நிலக்கரி விநியோகத்திற்கான விலைமனு கோரலுக்கு பதிலளித்த இரண்டு நிறுவனங்களில், ரஷ்ய நிறுவனம் ஏலம் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகம் கொண்டுள்ளதாகவும், மற்றைய நிறுவனங்களும் இன்று 19 வரை மேன்முறையீடு செய்யலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒக்டோபர் இறுதி வரை போதுமான நிலக்கரி கையிருப்பு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். செப்டம்பர் 30 வரையான காலப்பகுதிக்கு தேவையான நிலக்கரியே இருந்தாகவும், நுரைச்சோலை மின் நிலையத்தின் ஒரு மின்பிறப்பாக்கியை கட்டாய பராமரிப்புக்காக மூட வேண்டியிருந்தது.

மற்றொரு மின்பிறப்பாக்கி அண்மையில் பழுதடைந்தது. அது வழமைக்கு திரும்ப இரண்டு வாரங்களாகும் என்பதால், ஒக்டோபர் இறுதி வரை கையிருப்பு போதுமானதாக இருக்கும் எனவும் அவர் கூறினார். ஐந்து மாத கடன் சலுகை காலத்தை கோரியதாகவும், இருப்பினும், ரஷ்ய நிறுவனம் ஆறு மாதங்களை வழங்க ஒப்புக்கொண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒக்டோபர் முதல் நிலக்கரியை இறக்குமதி செய்யத் தொடங்குவோம் என தெரிவித்த அவர், விலை சூத்திரத்தின் மூலம் விலை நிர்ணயிக்கப்படும் எனவும் கூறியுள்ளார். அண்மையில் 4.5 மில்லியன் மெட்ரிக் தொன் நிலக்கரியை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்திற்கு, மூன்று ஆண்டுகளுக்கு வழங்குவதற்கான கேள்விப் பத்திரத்தை முன்வைத்தது. கடந்த 10 ஆம் திகதி ஏலம் முடிவடைந்தது எனவும் லங்கா நிலக்கரி நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஜகத் பெரேரா தெரிவித்துள்ளார்.

மின் உற்பத்தி நிலையத்திற்கு ஆண்டுக்கு 2.36 மில்லியன் மெட்ரிக் தொன் நிலக்கரி தேவைப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மற்றும் மே மாதங்களில் மட்டுமே நிலக்கரியை இறக்குமதிசெய்ய முடியும். முந்தைய வழங்குநர் இன்னும் 11 இலட்சத்து 40 ஆயிரம் மெட்ரிக் தொன் நிலக்கரியை வழங்க வேண்டியிருந்தது என்றும், அவற்றில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் நிலக்கரியைப் பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒக்டோபர் முதல் ரஷ்ய நிறுவனம் 2022ஆம் ஆண்டுக்குரிய மீதமுள்ள நிலக்கரியையும், 2023ஆம் ஆண்டும், மற்றொரு வருடத்திற்கும் நிலக்கரியை வழங்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கோட்டாக்கு எட்டு அடுக்கு பாதுகாப்பு வழங்க பசில் ராஜபக்ஷ கோரிக்கை

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எட்டு அடுக்கு பாதுகாப்பினை வழங்குமாறு பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதி தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பான முறையில் நாடு திரும்புவதற்கு வழியேற்படுத்தி கொடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். இதேவேளை பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு நாட்டை கட்டியெழுப்ப பொதுஜன பெரமுன நிபந்தனையற்ற ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர் வலியுறுத்தினார். இருப்பினும் சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்காவிடின் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து அவதானம் செலுத்தப்பட வேண்டும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் கேட்டுக்கொண்டார்.

அதன்படி பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்க அவதானம் செலுத்த வேண்டும் என்றும் சாகர காரியவசம் வலியுறுத்தினார்.

# கேரளா கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது



**பாறுக் ஷிஹான்**

கல்முனை மா நகரத்தை அண்மித்த பகுதியில் போதைப்பொருடன் சந்தேக நபரை சாகாமம் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் சாகாமம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய வெள்ளிக்கிழமை(19) இரவு இக்கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது. கேரளா கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளை சூட்சுமமாக விற்பனை செய்துவந்த கல்முனைகுடி 12 பகுதியை சேர்ந்த 38 வயதான அப்துல் ஜப்பார் முகமட் றிஸ்வான் என்ற சந்தேக நபரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

இந்நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் இக்கைது இடம்பெற்றுள்ளதுடன் சம்பவ தினமன்று விசேட அதிரடிப்படையினர் மாறுவேடத்தில் சென்று குறித்த போதை பொருட்களை விற்பனை செய்ய முயன்ற சந்தேக நபரை கல்முனை அம்மன் கோவில் வீதியில் வைத்து கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர் போதைப்பொருள் வியாபாரி என விசாரணையின் போது தெரியவந்துள்ளதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் 4 கிராம் 42 மில்லி கிராம் உட்பட கேரளா கஞ்சா 765 கிராமும் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. பின்னர் கைது செய்யப்பட்ட நபர் சான்று பொருட்களுடன் கல்முனை தலைமையக பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.



பட்டிருப்பு கல்வி வலய தமிழ் தினப்போட்டி இன்று(20) நடைபெற்ற போது..

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022



கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022
தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

# யானை தாக்கியதில் குடும்பஸ்தர் பலி

**(ரக்ஸனா)**

வெல்லாவெளி பொலிஸ் பரிவிற்குட்பட்ட யானைகட்டியவெளி பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை(19) குடும்பஸ்தர் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலில் பலியானதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர். மண்டூர் மூன்றாம் பிரிவிவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இளையதம்பி யோகநாதன் என்பவரே இச் சம்பவத்தில் பலியானவராவார். சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து வேளாண்மை வயலினை பார்வையிடுவதற்காக சென்ற போது வீதியோரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் மறைந்திருந்த யானை குறித்த நபரினை தாக்கியதில் சம்ப இடத்திலேயே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி நீதிமன்ற பதில் நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் பிரேதத்தை நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். அண்மைய நாட்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானையின் தாக்குதலினால் பல மனித உயிர்கள் இழந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது. சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்





**பேரின்பராஜா சபேஷ்**

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மாணவர்கள் விடுதலை செய்யுமாறு கோரி கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் வெள்ளிக்கிழமை (19) மாலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். கிழக்கு பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாக முன்றலில் ஒன்றுசேர்ந்த மாணவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தி கவனயீர்ப்பு பேராட்டத்தில் ஈடுபட்டனர். கோட்டா கோ கம போராட்டத்தில் ஈபட்டவர்கள்மீது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யயுமாறு கோரியும் இந்த கவனயீர்ப்பு போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டடிருந்தது.

# புதுக்குடியிருப்பில் போதைப்பொருளுக்கு எதிராக பேரணி





**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பிதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புதுகுடியிருப்பு கிராமத்தில் மார்க்லிஸ/ல் உலமா சபையின் ஏற்பாட்டில் புதுகுடியிருப்பு கோனார் பண்ணை பள்ளிவாசல் நிர்வாகிகள் உதவியுடன் புது குடியிருப்பு கிராமத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற சங்கங்களின் ஒத்துழைப்புடன் போதை பொருள் ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வும் பேரணியும் வெள்ளிக்கிழமை (19.08.2022) மாலை 4 மணியளவில் இடம்பெற்றது. அதாவது இவ் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியில் யானது பெருந்தொகையான இஸ்லாமிய மக்கள் தங்கள் கைகளில் பதாகளை ஏந்தியவர்களாக கிராமத்தின் ஊடாக சகல வீதிகளிலும் சென்று போதைப்பொருளுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பியவர்களாக இவ் பேரணி இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் குதுகலமாக குடித்து மகிழ்வதும் தன்னை மறந்து கஞ்சா இழுப்பதும் புகைவிட்டு திமிர் கொள்வதும் ஐஸ் அடித்து உளறித்திரிவதும் கெத்தான ஆண்மகனின் அடையாளம் அல்ல. போதையை ஒழிப்போம் உயிரைக் காப்போம் என்ற தொனியும் ஒலித்தது இவ் பேரணியில்.

# சமூகத்திற்கும் அரச ஊழியர்களுக்கும் இடையிலான பிணைப்பினை வலுப்படுத்தல்





**(சுதா)**

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினால் நடாத்தப்படும் "சகவாழ்வின் மூலம் சமூகத்திற்கும் அரச ஊழியர்களுக்கும் இடையிலான பிணைப்பினை வலுப்படுத்தல்" எனும் தலைப்பில் "சகவாழ்வு" தொடர்பான ஆலோசனை குழு ஒன்றினை மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் ஸ்தாபிப்பது தொடர்பான ஆரம்பக்கட்ட கூட்டம் நேற்று(19) திகதி மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலானது இன்று காலை 10.00 மணியளவில் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் இடம்பெற்றுள்ளதுடன், "சகவாழ்வு" தொடர்பான ஆலோசனைக் குழுவினை அமைப்பது தொடர்பாக மாநக சபையின் உறுப்பினர்களின் ஆலோசனையினை பெறுவதற்கான முதற்கட்ட கூட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபையின் அதிகளவிலான உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்ததுடன், தமது ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்.

இதன் போது குறித்த திட்டத்தினை அமுல்படுத்திவரும் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் திட்ட முகாமையாளர் பெருமாள் பிரதீப், குறித்த திட்டத்தின் நிதிப்பங்களிப்பு நிறுவனமான அக்டட் நிறுவத்தின் பிரதித் திட்ட முகாமையாளர் இ.கஜேந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் உள்ளிட்ட மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் என மேலும் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்ததுடன், தமது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தெரிவித்திருந்தனர்.

# புதையலில் தோண்டப்பட்ட கறுப்பு தங்கத்துடன் ஒருவர் கைது



**பாறுக் ஷிஹான்**

புதையல் அகழ்வில் தோண்டி எடுக்கப்பட்ட தங்கம் என கூறி விற்பனை செய்ய முயன்ற சந்தேக நபர் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோரக்களப்பு குளத்திற்கருகில் தகவல் ஒன்றிற்கு அமைய சம்பவ தினமான வெள்ளிக்கிழமை(19) மாலை கல்முனை விசேட அதிரடிப்படையினரால் இக்கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

24 வயதுடைய கோமாரி பகுதியை சேர்ந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ரூபா 20 இலட்சம் பெறுமதியான 350 துண்டுகள் அடங்கிய 113 கிராம் 180 மில்லி கிராம் எடையுடைய ஒரு தொகுதி கறுப்பு பொன்நிற கற்கள் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மாஅதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிசங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட் பண்டார (13443) பொலிஸ் கன்ஸ்டபிள்களான சுபசிங்க (14235) புத்திக( 40557)அமரசேகர (67810) இந்துநில் (66833) ராஜபக்ச (24812)அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர் சான்று பொருட்களுடன் திருக்கோவில் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# 18 அதிகாரிகளுக்கு வட்ஸப் மூலம் அவசரமாக இட மாற்ற உத்தரவு

**நூருல் /ஹுதா உமர்**

கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் 18 பேருக்கு அவசரமாக வட்ஸப் மூலம் திடீர் இட மாற்ற கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. ஆளுனர் அனுராதா ஜகம்பத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் – நிர்வாகம் ஆ. மன்சூர் இட மாற்றத்துக்கான உத்தரவை பிறப்பித்து இருக்கின்றார். ஆனால் இட மாற்ற கொள்கைக்கு முரணான வகையிலான இந்த உத்தரவுகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஸ்ரீலங்கா அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்க சம்மேளனம் கோரி எழுத்து மூலம் வெள்ளிக்கிழமை கோரியது.



சம்மேளனத்தின் தலைவர் எஸ். லோகநாதன் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளவை வருமாறு, உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களாக முகாமைத்துவ சேவைஉத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்தை சேர்ந்தவர்கள் கடமையாற்றுகின்றனர். அத்தரத்தை சேர்ந்தோர் இல்லாத சபைகளில் பதில் கடமையை முகாமைத்துவ சேவை தரம் – 1 ஐ சேர்ந்தோர் செய்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தில் மேற்படி உத்தியோகத்தர்களில் 18 பேர் திடீர் இட மாற்றம் செய்யப்பட்டு உள்ளனர். வருடாந்த இட மாற்றத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு உள்ள நிலையில் இவ்வாறான இட மாற்றங்களை செய்ய முடியாது. அத்துடன் இவர்களில் பதில் கடமையாற்றிய பலர் பதில் கடமையில் இருந்து நீக்கப்பட்டு புதியவர்கடு பதில் கடமைக்கு நியமிக்கப்பட்டு உள்ளனர். மேலும் அவர்களுடைய சேவை நிலையத்தில் 05 வருடங்களை பூர்த்தி செய்யாமலேயே சம்மதம் பெறப்படாமலும், விருப்பத்துக்கு மாறாகவும் மாற்றப்பட்டு உள்ளனர்.

எனவே இட மாற்ற கொள்கைக்கு முற்றிலும் முரணானதாக மாத்திரம் அல்லாமல் உத்தியோகத்தர்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்ற வகையிலும் இட மாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. சிரேஷ்ட தகைமை வாய்ந்த பலரும் பதில் கடமைக்கு செல்வதற்கு உரிய தகைமையும், விருப்பமும் உள்ளவர்களாக இருக்கின்ற போதிலும் அரசியல் பிரமுகர்கள், உயரதிகாரிகள் போன்றோரின் செல்வாக்கு உள்ளவர்கள் பதில் கடமைக்கு நியமிக்கப்பட்டு தகைமை உடையவர்கள் புறக்கணிக்கப்பட்டு உள்ளனர்.

அத்துடன் ஏற்கனவே கடமையில் இருந்த பலர் பழி வாங்கப்பட்டு உள்ளனர். இதுவும் நிர்வாக நடைமுறைக்கு முரணானது ஆகும். இட மாற்றம் மிக அவசரமாக செய்யப்பட்டு கடிதங்கள் மற்றும் விடுவிப்பு கடிதங்கள் தபாலில் அனுப்பப்படுவதற்கு அவகாசம் இல்லாமல் வட்ஸப்பில் அனுப்பப்பட்டு உள்ளன. இது வலுவான சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளது. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அதிசிறப்பு தரத்தினரை தெரிவு செய்வதற்கு நேர்முக பரீட்சை தற்போது இடம்பெற்று கொண்டிருக்கின்றது. அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட உள்ள நிலையில் இவ்வாறு இட மாற்றங்கள் செய்யப்பட்டு இருப்பது சில வெற்றிடங்களை இல்லாமல் ஆக்கி, குறித்த சிலருக்கு சில இடங்களை வழங்குவதற்கான திட்டமிட்ட செயற்பாடாகவும் எம்மால் கருதப்படுகின்றது.

அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு உத்தேசித்து உள்ள இக்கால கட்டத்தில் இச்செயற்பாடுகள் இடம்பெற்று இருப்பதன் பின்னணியில் அரசியல் சதி இருக்கலாம் என்றும் கருத வேண்டி உள்ளது. இம்முறைகேடான இட மாற்றம் மற்றும் பதில் கடமைக்கு உரிய புதிய நியமனம், பதில் கடமைக்கு இருந்தவர்களின் நீக்கம் ஆகியவற்றை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். எனவே தயவு செய்து இட மாற்ற உத்தரவுகளை உடன் ரத்து செய்யுமாறும், இட மாற்ற கொள்கைக்கு அமைய நியாயமாகவும், நீதியாகவும் தேவையான இட மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யுமாறும் வேண்டி கொள்கின்றோம்.

அத்துடன் பதில் கடமை நியமனங்களை வழங்கும்போது அரசியல் செல்வாக்கு மற்றும் அது போன்ற புற காரணிகளின் தாக்கம் இல்லாமல் நியாயமான வகையில், விருப்பமுள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அழங்க ஆவன செய்யுமாறும் கோருகின்றோம். என்று தெரிவித்துள்ளார்

# அமைப்புக்களின் தடை நீக்கத்தை இனவாதமாகப் பார்க்கப்படுவதை நிறுத்த வேண்டும்



இலங்கை அரசு நீண்ட காலத்திற்கு பின்பு பயங்கரவாத அமைப்புக்கள் என நினைத்து இருந்த நிலையில் தற்சமயம் புதிய அரசு வெளிநாடுகளில் உள்ள அமைப்புக்களின் தடைநீக்கத்தையும், வடக்கு கிழக்குக்கான உதவிகளையும் அறிவித்தல் விடுத்த நிலையில் சில சிங்கள அமைப்புக்கள் இதை எதிர்ப்பதென்பது தமிழர்களை இந் நாட்டின் பிரஜைகள் அல்ல என மீண்டும் மீண்டும் சிங்கள இனவாதம் வலியுறுத்துவதற்கு சமனாகும்.

வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்தவர்கள் கல்வி, தொழில், பாதுகாப்பு மற்றும் அடிப்படை தேவைகளுக்காகவே சென்றவர்கள், புலம் பெயர்ந்தவாகள், இடம் பெயர்ந்தவர்கள் என்பதை இனவாதிகள் மறந்து விட்டு பல இனவாதிகள் பேசுவதென்பது ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும். அங்கு சென்றவர்கள் அநேகமானவர்கள் நிர்ப்பந்தம் காரணமாகவே இங்கு அனைத்தையும் இழந்து சென்றுள்ளார்கள். அங்கு சென்றவர்கள் பலர் தனிநபராகவும், கூட்டாகவும், குடும்பங்களாகவும் இலங்கையில் உள்ளவர்களுக்கு தொடர்ச்சியாகஉதவிகளைச்செய்துவருகின்றனர்.இச் செயற்பாடானது பாராட்டக்கூடியது, கௌரவத்திற்கு உரியதுமாகும். இச் செயற்பாடுகளுக்கு நாங்கள் தலை வணங்குகின்றோம்.

குறிப்பாக, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பிலிருந்தும் சென்றவர்கள் கூட பல ஆண்டு காலமாக தனிநபராகவும், அமைப்பு ரீதியாகவும் உதவி செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். இதேபோல அமைப்பைச் சார்ந்தவர்களும், நலன்விரும்பிகளும்,பொதுமக்களும் தனிநபர்களும் மனம் கோணாமல் எம்மவர்களுக்கு உதவி வருவது குறிப்பிடத்தக்கதாகும். தற்சமயம் அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டுள்ள தடைநீக்கத்தை புலம் பெயர் தமிழர்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு எமது சமூகத்தை பொருளாதார ரீதியாக வளப்படுத்துவதற்கு உழைக்குமாறு மு.கிழக்கு மாகாண சபை உறுப்பினர், ஈ.பி.ஆர்.எல்.எப்– ப.ம, இரா.துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சம்பியன் பட்டத்தை இரண்டாவது தடவையாகவும் வென்றது சம்மாந்துறை




**நூருல் /ஹுதா உமர்**

நிந்தவூரில் 40 வருடங்கள் கடந்த மூத்த விளையாட்டு கழகங்களில் ஒன்றான இம்ரான் விளையாட்டுக்கழக ஏற்பாட்டில் கிழக்கு மாகாண 32 முன்னணி கழகங்கள் பங்குபற்றிய "இம்ரான் பிரீமியர் லீக் சீஸன் 05" 20 க்கு 20 கடினபந்து கிரிக்கட் சுற்றுத்தொடரின் சம்பியன் பட்டத்தை சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சம்மாந்துறை விளையாட்டுக்கழகம் இரண்டாவது தடவையாகவும் தனதாக்கி கொண்டது.

நிந்தவூர் தலைவர் அஸ்ரப் ஐக்கிய பொதுவிளையாட்டு மைதானத்தில் இம்ரான் விளையாட்டுக்கழக தலைவரும் நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினருமான சட்டத்தரணி ஏ.எல். றியாஸ் ஆதமின் தலைமையில் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற சம்மாந்துறை விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயித்த 20 ஓவர்களில் 196 ஓட்டங்களை 07 விக்கட்டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது. சிறப்பாக துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை விளையாட்டுக்கழக வீரர்களான இர்ஷாத் 25 பந்துகளை எதிர்கொண்டு 56 ஓட்டங்களையும், றிக்காஸ் 33 பந்துகளை எதிர்கொண்டு 45 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக்கழகம் சார்பில் சிறப்பாக பந்து வீசிய றிழ்வான் 03 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

அதனடிப்படையில்197 எனும் வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக்கழகம் 16.2ஓவர்களில்சகலவிக்கட்டுக்களையும்இழந்து 105 ஓட்டங்களை மட்டும் பெற்று 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவினர். சாய்ந்தமருது விளாஸ்டர் விளையாட்டுக்கழகம் சார்பில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் இஷ்ரத் 24 ஓட்டங்களையும், ஆபாக் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக 56 ஓட்டங்களை பெற்ற சம்மாந்துறை விளையாட்டுக்கழக வீரர் இர்ஷ ாத் தெரிவு செய்யப்பட்டதுடன் தொடராட்டகாரராக நிந்தவூர் இம்ரான் விளையாட்டு கழக வீரர் நிக்ஸி அஹமட் தெரிவானார்.

இப்போட்டிக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹீர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் அதிதிகளாக கலந்து கொண்டு வெற்றி கேடயத்தையும், பணப்பரிசில்களையும் வழங்கி வைத்தனர். இந்த பிரதேசத்தில் இவ்வருடம் நடந்த முடிந்த சகல சுற்று தொடர்களிலும் பலம்வாய்ந்த அணிகளை வீழ்த்தி சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தினர் தொடர்ச்சியாக 06 சம்பியன் பட்டங்களை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மூதூரில் உழவு இயந்திரம் கவிழ்ந்து 03 பேர் பலி



**(அ. அச்சுதன், எப்.முபாரக்)**

மூதூர் பாச்சனூர் 64 ஆவது கட்டைப் பகுதியில் அமைந்துள்ள கொட்டியாரம் ரஜமஹா விகாரையில் சிரமதான நிகழ்விற்காக சென்ற உழவு இயந்திரம் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்விபத்துச் சம்பவம் இன்று(20) இடம்பெற்றுள்ளது.

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கந்தளாயில் இருந்து சேருவிலவுக்குச் சென்ற உழவு இயந்திரமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது அதில் 21 பேர் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பத்திற்கும் மேற்பட்டோர் காயங்களுக்குள்ளாகி உள்ளதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தோரின் சடலம் மூதூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்துச் சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம்

அமைதியான பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம். என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அவர்கள் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தான் கூறுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் இடையில் கடுமையான முரண்பாடு இருப்பதை மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தியுள்ளது. போராட்டம் கலைந்து போவதோடு மாத்திரம் நிற்காது, மாணவர்கள் சிலரை கைது செய்தும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மாணவர் உட்பட மேலும் சிலரை தடுப்புக்காவல் உத்தரவின் பிரகாரம் தடுப்புக்காவலில் வைப்பதையும் ஐக்கிய மக்கள் சக்தியாக வன்மையாக கண்டிக்கிறோம்.

அமைதியான போராட்டங்களுக்கு இடையூறு ஏற்படாது என ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தொடர்ந்தும் வலியுறுத்தினார்.

அரசியலமைப்பில் மற்றும் சர்வதேச சமவாயங்களின் பிரகாரமைந்த கடமை மற்றும் பொறுப்புக்கூறலுக்குட்படும் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல், போராட்டம் நடத்துதல் போன்ற ஜனநாயக உரிமைகள் அவசரகாலச் சட்டத்தை விதித்து நசுக்கப்படுகின்றன என்பதுதான் நடக்கிறது. இந்த அடக்குமுறைக்கு எந்த நியாயமான காரணத்தையும் அரசாங்கம் வழங்கத் தவறிவிட்டது.

இந்தப் போராட்டத்தில், பல்கலைக்கழகங்களை உடனடியாகத் திறக்க வேண்டும் எனவும், நாட்டு மக்கள் வாழ்வதற்கு ஏற்ற பொருளாதாரத் திட்டத்தைத் தயாரிக்குமாறும், சுதந்திரமாக வாழ்க்கைத் தொழிலைத் தொடர்வதில் உள்ள தடைகளில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றே போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். அந்தக் கோரிக்கைகளுக்குப் பதில் சொல்லாத அரசு அமுல்படுத்தும் அடக்குமுறை செயல்பாட்டில் ஒரு மறைமுக நிகழ்ச்சி நிரல் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. இவை அனைத்தும் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தியால் வழிநடத்தப்படுகின்றன என்று நாங்கள் நம்புகிறோம். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் சமூகத்தில் அச்சத்தை ஏற்படுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை செயழிலக்கச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் அடுத்த நிகழ்ச்சி நிரலில் செயல்படுத்தப்படும் பல திட்டங்கள் சமூகத்தில் கடுமையான பதற்றத்தை உருவாக்குவது போல் தெரிகிறது. மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் மீண்டும் கங்கணம் கட்டிக்கொண்டு களமிறங்குகிறார்கள் என்பதும் தெளிவாகிறது. இவையனைத்தும் பொதுமக்களின் எதிர்ப்பையும் கோபத்தையும் தூண்டும் இடைக்கால ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளே தவிர நாட்டின் அடிப்படை நெருக்கடிகளுக்கு தீர்வுகளை வழங்கவில்லை என்பது தெளிவாகிறது. அவசரகாலச் சட்டம் உடனடியாக நீக்கப்படும் என அறிவித்த ஜனாதிபதி, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஏழு மாவட்டங்களுக்கு முப்படை இராணுவத்தை அழைத்ததிலிருந்தும், அறிக்கைக்கும் செயலுக்கும் இடையிலான முரண்பாட்டையே காண்கிறோம்.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை முடக்கும் மற்றும் அரசியலமைப்புச் சட்டம் உத்தரவாதம் அளித்துள்ள சிறப்புறுரிமைகளை நசுக்கும் அனைத்து செயல்முறைகளையும் உடனடியாக மீளப் பெறுமாறு அரசை வலியுறுத்துகிறோம். அதோபோல்,தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மாணவ செயற்பாட்டாளர்களை உடனடியாக விடுவிக்குமாறும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம். மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் சர்வ கட்சிகளின் ஆதரவை நாட்டின் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு என நேர்மையான அபிலாஷைகளை மனதில் கொண்டு கோரினால் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அவ்வாறானவொன்றை சாதிக்க முடியாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# நத்வதுல் புஹாரி அரபிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா



**ஹஸ்பர்**

திருகோணமலை மாவட்டம்,கிண்ணியா பிரதேச செயலகப் பகுதியில் இயங்கி வரும் நத்வதுல் புஹாரி அரபிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நேற்று (19) மாலை குறிஞ்சாக்கேணியில் உள்ள ஷ ரீஆப் பிரிவு வளாகத்தில் இடம் பெற்றது. கல்லூரி அதிபர் அல் ஹாபிழ் அஷ்ஷெய்க் எஸ்.எம்.முனீர் தலைமையில் இடம் பெற்ற குறித்த பட்டமளிப்பு விழாவில் கல்லூரியின் தலைவர் முன்னால் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இதில் 2019,2020,2021,2022 ஆண்டுகளுக்கான வெளியான மாணவர்களுக்கான பட்டங்கள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன. இதில் அல் ஹாபிழ்,அல் ஆலிம்,கத்முல் புஹாரி ஆகிய பட்டங்களை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வுக்கு கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி உட்பட பெற்றார்கள், நலன் விரும்பிகள் சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.




நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

# கால் புதையும் மண்ணில்

# சிற்கள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

**கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்**

## காண வாரீர்!



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206